24.08.2022

அ.வ.எண். 137/2018

வா.சா. 1 நாகேஷ்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கல் உடைக்கும் தொழில் செய்து வருகிறேன். எனக்கு வருமானம் கல் உடைக்கும் தொழிலில் இருந்து தான் வருகிறது. என்னுடைய பெயரில் வீடு மற்றும் விவசாய நிலம் எதுவும் இல்லை. நான் கல் உடைக்கும் தொழிலில் ஒரு நாளைக்கு சுமார் ரூபாய்.700 வரை கிடைக்கும். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளார்கள். என்னுடைய மகள் கல்லூரியிலும், மகன் பனிரெண்டாம் வகுப்பு படித்து வருகிறார்கள். என்னுடைய மகள் தனியார் கல்லூரியில் படித்து வருகிறார். என்னுடைய பிள்ளைகள் பனிரெண்டாம் வகுப்பு வரை அரசு பள்ளியில் தான் படித்தார்கள். என் மனைவி ஒரு வருடமாக தான் கல்லூரிக்கு கூட்டுகிற வேலைக்கு செல்கிறார். என்னுடைய ஊரில் எத்தனை பேருக்கு வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேன் என்றால் நான் யாருக்கும் வட்டிக்கு பணம் கொடுத்ததில்லை. பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் பிரதிவாதி ஒரே ஊர் மற்றும் ஒரே இனத்தை சேர்ந்ததால் அவரை எனக்கு தெரியும். பிரதிவாதியும் கல் உடைக்கும் கூலி வேலை தான் செய்கிறார். பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் போது விசாரித்து கடன் கொடுத்தேனா என்றால் விசாரித்தேன் ஒரு மாதத்தில் சீட்டு பணம் வந்துவிடும் என்று கூறியதால் தான் கடன் கொடுத்தேன். பிரதிவாதிக்கு 75 வயதுக்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். பிரதிவாதி முதல் முறையாக தான் என்னிடம் கடன் வாங்கியுள்ளார் இதற்கு முன்பு கடன் எதுவும் வாங்கவில்லை. பிரதிவாதி வழக்கில் குறிப்பிட்டுள்ள கடன் தொகையை எப்பொழுது என்னிடம் கேட்டார் என்றால் 22.10.2017 ஆகும். என்னிடம் 1,00,000/- ரூபாய் பணம் கேட்டார். அவர் கேட்ட அன்றைய தினமே ரூபாய்.1,00,000/- பணத்தை கொடுத்துவிட்டேன். என்னுடைய வீட்டில் வைத்து தான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். பிரதிவாதிக்கு கடன் கொடுத்த தேதியில் பிரதிவாதியை தவிர வேறு யாருக்கும் கடன் கொடுக்கவில்லை. நான் தாவாவில் வசிப்பதாக குறிப்பிட்டுள்ள முகவரியில் தான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தாக கூறியுள்ளேன். நான் தாவாவில் வசிப்பதாக குறிப்பிட்டுள்ள முகவரியில் வசிப்பதற்கான ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது குடும்ப அட்டை ஆவணம் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய முடியும். இந்த குடும்ப அட்டை ஆவணம் வேறு எந்த ஆவணத்தையும் தாவாவுடனோ அல்லது முதல் விசாரணை நிருபணவாக்குமூலத்துடனோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக கூறப்படும் முகவரியில் நான் வசிப்பதற்கான ஆதார்அட்டையோ, குடும்ப அட்டையோ வேறு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் கடனுறுதி சீட்டில் உள்ள விலாசத்தில் குடியிருக்க வில்லை என்றும்

அந்த விலாசத்தில் பிரதிவாதிக்கு கடன் தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் யார் யார் இருந்தார்கள் என்றால் நான் மூர்த்தி, லோகநாதன், கோவிந்தன் மற்றும் என்னுடைய மனைவி ஆகியோர்கள் இருந்தோம். மூர்த்தி , லோகநாதன் ஆகியோர்கள் நான் அழைத்து தான் வந்தார்களா என்றால் அவர்களாகவே தான் வந்தார்கள். லோகநாதன் எனக்கு மைத்துனர் என்றால் தூரத்து சொந்தக்காரர் மைத்துனர் உறவினராவார். மூர்த்தி என்பவர் என்ன உறவுமுறை என்றால் என்னுடைய அம்மாவிற்கு பெரியப்பா பேரன் ஆவார். பிரதிவாதியும் அவர்களுடைய மகன்களும் ஒரே வீட்டில் வசித்து வருகிறார்களா என்றால் அக்கம்பக்கத்தில் தனித்தனியாக வசித்து வருகிறார்கள். பிரதிவாதி பணம் வாங்க வந்த போது என்ன கொண்டுவந்தார் என்றால் பாண்டு அவர் தான் வாங்கி வந்தார். பிரதிவாதியை பாண்டு நான் வாங்கி வர சொல்லவில்லை அவரே தான் வாங்கி வந்தார். நான் தாவாவில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அருகில் எனக்கு வேண்டப்பட்டவர்கள், எனது உறவினர்கள் அங்கு தான் வசித்து வருகிறார்கள். பிரதிவாதி என்னிடம் காலை சுமாராக 8.00மணிக்கு கடன் கேட்டார். நான் அன்றைய தினம் 12.00 மணிக்கு தான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். பிரதிவாதி 8.00மணிக்கு வந்து 12.00மணி வரை என்னுடைய வீட்டில் தான் இருந்தாரா என்றால் 8.00மணிக்கு வந்து பிரதிவாதி பணம் கேட்டவுடன் 12.00மணிக்கு வரசொல்லி அனுப்பிவிட்டேன். ரூபாய்.1,00,000/- பணத்தை நகை அடமானம் வைத்து கொடுத்தேனா என்றால் இல்லை என்னுடைய வீட்டில் சேமிப்பில் வைத்திருந்ததை கொடுத்தேன். நான் தினமும் ரூபாய்.700/- சம்பாதித்து சாம்பாதித்த தொகையை சாப்பிட்டிற்கும், குடும்ப அத்தியாவசிய தேவைக்கும் பிள்ளைகளை படிக்கவைப்பதற்குமே நான் சம்பாதித்த தொகை ஆகிவிடும் என்றும் சேமிக்கும் அளவிற்கு வருமானம் எதுவும் இல்லை என்றும் ரூபாய்.1,00,000/- பணத்தை சேமித்து வைத்து பிரதிவாதிக்கு கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பாண்டு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 2, 3 மாதங்களுக்கு முன்பு பூர்த்திசெய்யப்பட்டது என்றால் சரியல்ல அன்றைய தினமே பூர்த்தி செய்யப்பட்டது. இந்த பாண்டை மூர்த்தி என்பவர் தான் பூர்த்தி செய்தார். என்னென்ன ஆவணங்களை வைத்து பாண்டை மூரத்தி என்பவர் பூர்த்தி செய்தார் என்றால் என்னுடைய குடும்ப அட்டை மற்றும் பிரதிவாதியின் குடும்ப அட்டையை வைத்து பாண்டு பூர்த்தி செய்யப்பட்டது. பாண்டில் உள்ள விவரத்தை மூர்த்தியே எழுதிக்கொண்டாரா என்றால் பணம் வாங்கியது போல் எழுதினார். லோகநாதன் என்பவர் புதன்சந்தை ஊரை சேர்ந்தவர், மூர்த்தி என்பவர் சேந்தமங்கலத்தில் உள்ள காந்திபுரம் ஊரை சேர்ந்தவர். மூர்த்தியும், லோகநாதனும் என்னுடைய வீட்டிற்கு 2.00மணிக்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. பாண்டில் பூர்த்தி செய்யப்பட்டவை வெவ்வேறு மையால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் சாட்சி லோகநாதன் மட்டும் அவருடைய பேனாவில் சாட்சி கையெழுத்து போட்டார் மற்ற

அனைவரும் அதே பேனாவில் எழுதினார்கள். சாட்சி லோகநாதன் விலாசத்தையும் குடும்ப அட்டையை வைத்து தான் மூர்த்தி பூர்த்தி செய்தார். பாண்டில் மூர்த்தி என்று எழுதப்பட்ட கையெழுத்திற்கும் பாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்தும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. மூர்த்தி என்று கையெழுத்து போட்டுள்ள இடத்திற்கும், ஆவணத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மற்ற வாசகங்களும் வித்தியாசமாக தான் உள்ளது என்றும் நான் வழக்கிற்காக இரண்டும் ஒன்றாக தான் உள்ளது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி கையெழுத்து போட்டுள்ள லோகநாதன் கதவு எண், எந்த தாலுக்கா, தெரு மற்றும் மாவட்டம் ஆகியவற்றை பாண்டு வா.சா.ஆ-1ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆவண எழுத்தர் மூர்த்தி என்ற கையெழுத்திற்கும், தகப்பன் பெயர் சின்னுசாமி காந்திபுரம் என்று எழுதப்பட்டுள்ள வாசகத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். மூர்த்தி எந்த கதவு எண், தெரு, மாவட்டம் பாண்டு வா.சா.ஆ.1ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-1 யை எனக்கு தெரிந்த லோகநாதன் மற்றும் மூர்த்தியை வைத்து மோசடியாக தயாரிக்கப்பட்டதால் தான் அவர்களுடைய முகவரியின் முழுமையான விவரங்கள் சரியாக வா.சா.ஆ-1ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வா.சா.ஆ-1ல் ஸ்டாம்ப் மேல் எத்தனை கைரேகை மற்றும் மற்ற இடங்களில் எத்தனை கைரேகை வைத்துள்ளார் என்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேல் கைரேகையும், கீழ் பகுதியில் கையெழுத்தும் பிரதிவாதி செய்துள்ளார். பிரதிவாதி கடன் தொகையை ஒரு மாதத்தில் திருப்பி கொடுப்பதாக கூறிதான் கடன் தொகையை வாங்கினார். கடன் தொகையை 100ரூபாய் நோட்டு பத்து கட்டுகளாக பிரதிவாதிக்கு கொடுத்தேன். பிரதிவாதி பலமுறை கடன் தொகையை கேட்டதாக தாவாவில் கூறியிருந்ததை எந்தெந்த தேதியில் கடன் தொகையை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் உண்மையிலேயே கடன் தொகையை கொடுத்திருந்தால் இந்த இந்த தேதியில் கடன் தொகையை கேட்டேன் என்று தேதியை குறிப்பிட்டிருப்பேன் என்றும் அவ்வாறு கடன் கொடுக்காததால் தான் தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. கடைசியாக பிரதிவாதியிடம் கடன் கேட்ட தேதியை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன். கடைசியாக கேட்ட தேதியை மட்டும் வழக்கில் கூறியுள்ளேன் என்றும் இதற்கு முன்பு கேட்டதாக வழக்குரையில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதியிடம் கடன் தொகையை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் உண்மையிலேயே கடன் தொகையை கொடுத்திருந்தால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றும் மோசடியாக தயாரிக்கப்பட்டதால் தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. தாவா தொகையை பிரதிவாதி செலுத்த 01.12.2018 தேதியில் நான் பிரதிவாதியிடம் நான் கேட்கவில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

01.12.2018 தேதியன்று பிரதிவாதியிடம் பணம் கேட்டேன் என்று குறிப்பிட்டு முதல் விசாரணை பிரமான வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். 01.12.2018 தேதியன்று நான் பிரதிவாதியிடம் கேட்காததால் தான் நான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல. 75 வயதுள்ள பிரதிவாதிக்கு ரூபாய்.1,00,000/- கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவாவில் கூறியுள்ள ரூபாய்.1,00,000/- பிரதிவாதிக்கு கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதியில்லை என்றும் தாவாவிற்கு வேண்டி ரூபாய்.1,00,000/- பிரதிவாதிக்கு கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா கடன் உறுதி சீட்டு தேதியில் பிரதிவாதிக்கு நான் கடன் தொகை எதுவும் நான் கொடுக்கவில்லை என்றும் அதே தேதியில் பிரதிவாதி எனக்கு ஆதரவாக தாவா கடன்றுதி சீட்டில் கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல. தாவா கடன்றுதி சீட்டை நான் என்னுடைய உறவினர்களான சாட்சிகள் மற்றும் எழுதிய சாட்சிகளான நபர்களுடன் சேர்ந்து மோசடியாக தயாரித்து பிரதிவாதிக்கு எதிராக பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் எதுவும் வாங்காததால் தாவா கடனுறுதி சீட்டு மறுபயன் அற்றது என்றால் சரியல்ல. நான் தாவாவில் கூறியுள்ள வியாஜ்ஜிய மூலமும் பொய் என்றால் சரியல்ல. நான் தாவாவின் கடனுறுதி சீட்டை மோசடியாக தயார் செய்து தவறான ஆதாயத்துடன் மற்றும் தூயகரங்களுடன் நீதிமன்றத்தை அனுகவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த தாவாவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- நாகேஷ்

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.